**முக்கிய வார்த்தைகள்:**
வீடு
வணக்க, வழிபாடு
குடும்பம்
உபூதிய்யத்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**27 பிப்ரவரி 2026 / 09 ரமதான் ஹிஜ்ரி 1447**

# ரமதானில், நமது வீடுகளையும் உபூதிய்யத்தின் சாராம்சத்தால் பிரகாசிக்கச் செய்வது

**الْحَمْدُ لِلَّهِ الَّذِي هَدَانَا لِلْإِسْلَامِ، وَوَفَّقَنَا لِإِدْرَاكِ شَهْرِ الصِّيَامِ وَالْقِيَامِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ الْمَلِكُ الْعَلَّامُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ سَيِّدُ الْأَنَامِ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ خَيْرِ مَنْ صَلَّى وَصَامَ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ الْكِرَامِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ. قَالَ جَلَّ فِي عُلَاهُ: يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ كُتِبَ عَلَيْكُمُ ٱلصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى ٱلَّذِينَ مِن قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ.**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொண்டு, நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வோமாக! இந்த ரமதான் நமது கடைசி ரமதானாக இருக்குமோ என நினைத்து, நமது நற்காரியங்களை அதிகரித்துக் கொள்வோமாக. அதன் மூலம் எண்ணற்ற வெகுமதிகளை நாம் அடையலாம்; நமது ஆன்மாக்கள் பாவங்களை விட்டும் பரிசுத்தமாகும். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

ரமதான் மாதத்தில் நமது பள்ளிவாசல்கள் பிரகாசமானவையாகவும் வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் மக்களால் நிரப்பமாகவும் காணப்படுகின்றன. எனினும், இன்றைய "குத்பா" பிரசங்கமானது, பின்வரும் கருத்தை நமக்கு நினைவூட்ட உள்ளது. அதுதான், அல்லாஹ்வின் மீதான நமது பக்தியை ரமதான் மாதம் மற்றும் பள்ளிவாசல்களோடு மட்டும் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதாகும்.

நமது **வீடுகள்,** வெறும் ஓய்வெடுக்கும் இடங்களாகவும் தங்குமிடங்களாகவும் உலக விவகாரங்களினால் நிரப்பமானவையாகவும் இருப்பது கூடாது. மாறாக, இஸ்லாமியப் பார்வையில் **வீடுகள்** என்பவை ஆரம்ப மத்ரஸாக்களாக கருதப்படுகின்றன; தனிநபர்களும் **குடும்பத்தார்களும்** அல்லாஹ்வுக்காக தமது **உபூதிய்யத்** [அடிமைத்தனத்தை] ஏற்படுத்திக் கொள்ளும் ஆரம்ப சூழ்நிலைகளாகவும் உள்ளன.

இறைத்தூதர் இபராஹிம் [அலை] அவர்களும் இறைத்தூதர் யஃகூப் [அலை] அவர்களும் ஓரிறை நம்பிக்கையை, எவ்வாறு **வீட்டிலிருந்தே** ஏற்படுத்த முயன்றார்கள் என்பதில் நாம் சிந்தனை செய்ய வேண்டும். அல்லாஹ், திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் 132-வது வசனத்தில் கூறுகிறான்:

وَوَصَّىٰ بِهَآ إِبۡرَٰهِـۧمُ بَنِيهِ وَيَعۡقُوبُ يَٰبَنِيَّ إِنَّ ٱللَّهَ ٱصۡطَفَىٰ لَكُمُ ٱلدِّينَ فَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسۡلِمُونَ ١٣٢

பொருள்: இதையே, இப்ராஹீம் தம் குமாரர்களுக்கு உபதேசம் செய்தார்; யஃகூபும் [இவ்வாறே செய்தார்]; அவர் கூறினார்: "என் குமாரர்களே! அல்லாஹ் உங்களுக்குச் சன்மார்க்கமாகிய [இஸ்லாத்தை] தேர்ந்தெடுத்துள்ளான்; எனவே, நீங்கள் [அல்லாஹ்வுக்கு அடிபணிந்த நிலையில்] முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்"

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

சற்று முன் ஓதப்பட்ட வசனத்தின் மூலம், நமது ஆன்மீகப் பயணமானது, ரமதான் மாதத்தையும் கடந்து, தொடர்ந்து நடைபெறும் என்பதை உறுதி செய்வதில் வீடுகளின் பங்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

**முதலாவதாக: வணக்க வழிபாட்டுச் செயல்களையும் ஆன்மீகத்தையும் வளர்த்துக் கொள்வதற்கு வீடு தான், சிறந்த இடமாக உள்ளது.**

**வீடுகளில் வணக்க, வழிபாட்டுச் செயல்கள்** உயிரோட்டத்துடன் காணப்படுமெனில், அவை இயல்பானவையாக ஆகி விடுகின்றன; குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் நிறைவேற்றப்படும் செயல்களாக மட்டும் அவை இல்லாமல், அன்றாட வாழ்க்கையின் பகுதியாக ஆகி விடுகின்றன; இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

"உங்கள் **வீடுகளிலும்** தொழுங்கள்; உண்மையில், ஒருவர் தொழுகின்ற தொழுகைகளில் சிறந்தது, அவர் தனது **வீட்டில்** தொழுவதாகும்; கட்டாயக் கடமைகளாக உள்ள தொழுகைகளைத் தவிர" {ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

வீடுகளில் தொழுகைகளைத் தொழப்பட்டால், திருக்குர்ஆன் தொடர்ந்து ஓதப்பட்டால், கேட்கப்படும் பிரார்த்தனைகளை நமது பிள்ளைகள் கேட்டால், அல்லாஹ்வை நினைவுகூர்வதானது சுற்றுப்புறச்சூழலை அழகுபடுத்தினால், ரமதான் மாதத்துக்குப் பின்பும் நமது **வீடுகள்** "ஈமான்" எனும் ஓரிறை நம்பிக்கையின் சூழ்நிலை மிக்கதாக ஆகி விடும்.

**இரண்டாவதாக: வணக்க வழிபாட்டுச் செயல்கள் பரம்பரைச் செயல்களாக ஆக்கப்பட வேண்டும்; தனிநபரின் செயலாக மட்டும் இருந்து விடக் கூடாது.**

நமது ஓரிறை நம்பிக்கை நம்மிடம் மட்டும் காணப்பட்டால் போதுமாகாது; அது உயிரோட்டமுள்ளதாகவும், பலரால் காணப்படுவதாகவும், ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்குப் பரப்பப்படு வதாகவும் இருக்க வேண்டும். இறைத்தூதர்கள், **வணக்க வழிபாட்டுச் செயல்களை** தாம் மட்டும் நிறைவேற்றுபவர்களாக இருக்கவில்லை; தமது

பிள்ளைகளும் அல்லாஹ்வை **வணங்கி**, **வழிபடுவதை** உறுதி செய்தார்கள்; பிள்ளைகளுக்கு உபதேசம் செய்து, அவர்களுக்கு வழிகாட்டினார்கள். தமது செயல்களின் மூலம் ஓரிறை நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள்.

வெறும் அறிவுரைகளைக் கூறி விடுவதால் மட்டும் நமது பிள்ளைகளிடம் ஓரிறை நம்பிக்கை ஏற்பட்டு விடாது; நமது வணக்க வழிபாட்டுச் செயல்களை நமது பிள்ளைகள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். தமது பெற்றோர்கள் தொழுவதைப் பிள்ளைகள் காணும் போது தொழுகையின் முக்கியத்துவத்தை அவர்கள் அறிந்து கொள்கிறார்கள்; பெற்றோர்கள் "துஆ" [பிரார்த்தனையைச்] செய்வதைக் கேட்கும் போது, அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக் கொள்ள வேண்டுமென்ற உணர்வை அவர்களின் பிள்ளைகள் பெறுகிறார்கள்; பெற்றோர்கள் திருக்குர்ஆன் ஓதுவதை பிள்ளைகள் காணும் போது, திருக்குர்ஆன் மீது அப்பிள்ளைகளுக்கு அன்பு ஏற்படுகிறது.

பெற்றோர்கள் மூலம் அறிமுகம் செய்து வைக்கப்படும் நல்ல பழக்க வழக்கங்கள், அவர்களின் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பாக அமைந்து விடுகின்றன. இன்று நிறைவேற்றப்படும் நல்ல செயல்பாடுகள், வருங்காலத் தலைமுறையினரின் ஓரிறை நம்பிக்கையை நிலைத்து நிற்கச் செய்கின்றன.

எனவே, இன்று நமது **வீடுகளின்** நிலை என்ன என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். **வணக்க வழிபாட்டுச் செயல்கள்** செழித்து வளரும் இடமாக அவை உள்ளனவா? கடைசியாக, நாம் எப்போது நமது **குடும்பத்தாருடன்** சேர்ந்து தொழுதோம்? கடைசியாக எப்போது திருக்குர்ஆன் ஓதப்பட்டு, நமது **வீடுகள்** பிரகாசிக்கச் செய்யப்பட்டன? நாம் அல்லாஹ்வுக்கு முன்பாக அடிபணிந்து, நம்மை நாம் தாழ்த்திக் கொண்டதை, நமது பிள்ளைகள் இறுதியாக எப்போது பார்த்தார்கள்?

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே**!
நாம், ரமதான் மாதத்தில் நமது **வணக்க வழிபாட்டுச் செயல்களால்** அல்லாஹ்வின் வீடுகளாகிய பள்ளிவாசல்களை எவ்வாறு பிரகாசிக்கச் செய்கின்றோமோ அவ்வாறே, நமது வீடுகளையும் ஓரிறை நம்பிக்கையின்

சூழ்நிலைகளால் பிரகாசிக்கச் செய்வோமாக! இதுதான், **உபூதிய்யத்** எனப்படும் அல்லாஹ்வுக்கான நமது அடிமைத்தனத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதன் சாராம்சமாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா, நமது **வீடுகளில்** "ஈமான்" எனும் ஓரிறை நம்பிக்கையையும் அமைதியையும் தனது கிருபையையும் வழங்கி அருள் புரிவானாக!

**بَارِكِ اللَّهُمَّ لَنا فِي شَهْرِ رَمَضَانَ،**

**بَارِكِ اللَّهُمَّ لَنا فِي شَهْرِ رَمَضَانَ،**

**بَارِكِ اللَّهُمَّ لَنا فِي شَهْرِ رَمَضَانَ.**

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّةَ وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.